# TNVM

## MAGAZINE

ISSUE 02

JAN 2024



**Grand Celebration**

Tamil Heritage Month Celebration - 2024

SPORTS & TAMIL COMPETETIONS

இனிய துவக்கம்

தலையங்கம் ........................................3
தமிழே நீ வாழி ........................................4
கவிதை புணைவோமா! ........................................5
தமிழர் நலவாழ்வு மன்றம் - இனிய துவக்கம் ........................................7
BADMINTON TOURNAMENT ........................................10
பூப்பந்து போட்டி ........................................10
சதுரங்க போட்டி ........................................12
Chess competition ........................................12
முதன்மை விருந்தினர் ........................................13
பயணச்சீட்டு - சிறுகதை ........................................14
கேரம்( சுண்டாட்டம் ) போட்டி ........................................15
மருதாணி போட்டி ........................................16
அந்நியன் (Alien) - DISCOVERING HUMANS ........................................17
வழிபாட்டு தலங்கள் ........................................18
சதுரங்கம் -a therapy ........................................19
இயல் (ற்)(ற) தமிழ் போட்டிகள் ........................................20
துணுக்குகள் ........................................22

# த லை ய ங்க ம்

தாயே ! தமிழே !
மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி நீயே !
உனது தொன்மையினை அளந்திட முன்னடி உண்டோ !

மரபு திங்களாம் ஜனவரியில், மார்கழி திங்கள் மதி நிறைந்த நன்னாளாம்
கொண்டாடும் இன்றல்லவோ எங்களுக்கு எல்லாம் பொன்னாளாம்.
உன்னை அளக்க உன்னை தவிர யாரால் முடியும்.

அகர முதல எழுத்தெல்லாம் என ஆரம்பித்"தாயே"! என் தமிழ் தாயே !
தாய்ப்பாலாய் தமிழர்க்கு 1330 குறள்கள் கொண்ட முப்பாலை ஊட்டினாயே !
அகம் புறம் என எண்ணூறு எண்ணங்களை விதைத்திட்டாய் !
"யாதும் ஊரே யாவரும் கேளிர் " என பொதுவுடைமை பொறித்திட்டாய் !

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல்நீர் போல்
அன்புடை நெஞ்சந்தான் கலந்தனவே" என காதலர்களின் மனம் புரிந்திட்டாய் !

உன் திருவாசகத்தில் அனைவரையும் உருகவைத்தாய்
நான்காயிர திவ்யபிரபந்தத்தில் ஆழ்த்தினாய்
தேனிற்கினிய தேவாரத்தில் திளைத்தாய்
திருப்புகழால் எங்கள் இடர் துடைத்தாய் !

கம்பன் வீட்டுக் கட்டுத்தறியையும் கவி பாடவைத்தாய் தாயே !
மதுரையை எரித்த கண்ணகியாய் நீதி நிலைநாட்டினாய்
மணிமேகலையாய், குண்டலகேசியாய் புத்தம் போதித்தாய்
சீவக சிந்தாமணியில் முதல் விருத்தப்பா காப்பியமாய் விளங்கினாய்
வளையாபதியின் வைரமாய் வளம் வந்தாய் தாயே !

"அச்சமில்லை அச்சமில்லை" என வீர முழக்கம் செய்தே எங்கள் சுதந்திரத்திற்கு வித்திட்டாய்
புதியதோர் உலகம் செய்து, வாழ நினைத்தால் வாழலாம் வழியா இல்லை பூமியில் என வழி காட்டினாய்

நின்றன் வளமும், தொன்மையும் அறியாது "மெல்லத் தமிழினிச் சாகும்" என்றவர் வாக்கு பொய்த்துப்போகட்டும் !!

வாழ்க தமிழ்!!! வளர்க தமிழ்!!!

**- கதிர்வேல் சுபாகரன்**

# தமிழே நீ வாழி



கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்ற யவை

கற்றதனால் ஆன பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்

எண்ண அரு நலத்தினாள் இணையள் நின்றுழி
கண்ணொடு கண் இணை கவ்வி. ஒன்றை ஒன்று
உண்ணவும். நிலைபெறாது உணர்வும் ஒன்றிட.
அண்ணலும் நோக்கினான்: அவளும் நோன்கினாள்



கம்பர்



இனி ஒரு விதி செய்வோம் - அதை எந்த
நாளும் காப்போம் , தனி ஒருவனுக்கு
உணவில்லை யெனில் ஜகத்தினை
அழித்திடுவோம்

மாலைப் போதில் சோலையின் பக்கம்
சென்றேன். குளிர்ந்த தென்றல் வந்தது.
வந்த தென்றலில் வாசம் கமழ்ந்தது.
வாசம் வந்த வசத்தில் திரும்பினேன்.





ஏழை மனதை மாளிகை ஆக்கி
இரவும் பகலும் காவியம் பாடு
நாளை பொழுதை இறைவனுக்கு அளித்து
நடக்கும் வாழ்வில் அமைதியை தேடு

- தாரிணி

# க வி தை  பு ணை வோ மா !

## அழகுதான்

என் அம்மா தீர்க்கமானவள் தன்னம்பிக்கை அதிகம், இதுவரை மண்டியிட்டதில்லை... அவள் எனக்கு அதை மட்டும் சொல்லித்தரவில்லை! மூர்க்கமானவள் கொஞ்சம் ஆணவம் நிறைய அதிகாரம் அவளுடன் மல்லுக்கட்டுவதே வழக்கம் எனக்கு முக்கியம் அவளுக்கென்றொரு கோபம் அகந்தை வெளி நட்பு காதல் காமம் ஆளுமை அதிகாரம் ஆசை கனவு முகம் கருவறை தொடங்கி என் காதல் வரை அவளை உதைத்த பின் தான் நான் பிரசவித்துக் கொண்டேன்... தூசியும் குப்பையுமாய் இரைந்த கூரைவீட்டில் கோபத்தோடும், சோகத்தோடும் கோப்பையில் உள்ளவற்றை அன்போடும் அழுக்குத் துணியோடும் பகிர்ந்து கொண்டிருக்கிறாள் எப்படி பார்த்தாலும் அம்மா அம்மாதான் ... அழகுதான்

**- கவிதா ரவீந்தரன்**

## அப்பா

உன் புன்னகையில்
உன் பொன் விழியில்!
உன் கண்ணசைவில்
உன் தாள் அசைவில்!
உன் வசமிருக்க
என் வாழ்வினிக்க!
என் நினைவிருக்க
நான் எதை கொடுக்க!
என் எனை மறக்க
நான் உனை நினைக்க!
உன் அடி பிறக்க
நான் விழித்திருக்க!
என் செவி மலர
நான் தவம் கிடக்க!
என்ன நடந்திடுமோ
என்று படபடக்க!
என்ன ஆயினிலும்....
நீ உடன் இருக்க
என் வாழ்வினிக்க!
இப்படிக்கு அப்பா

**- ரவின் முருகன்**

## மாத(வ)ம்

சித்திரை மாதம் பௌர்ணமி நேரம்
அழகரை ஆற்றில் இறக்கி..
பின் வரும் வைகாசியில் விசாகமாய்
முருகன் அருள..
ஆனியிலே அவன் அப்பனுக்கு தில்லை
மஞ்சனம் எடுத்து...
ஆடியில் அம்மனுக்கு கூழ் ஊற்றி
குளிர வைத்து...
ஆவணியிலே வரும் சதுர்த்தி அன்று
விநாயகருக்கு
கொலுக்கட்டை படைத்து....
புரட்டாசியில் பெருமாளுக்கு விரதம் இருந்து...
ஐப்பசியில் லிங்க வடிவமாம் ஈசனுக்கு
அன்னாபிஷேகமிட்டு.....
கார்த்திகையில் ஐயப்பனுக்கு மாலையிட்டு....
மார்கழியில் மாதவனை
தொழுது....
தையில் ஆதவனை வரவேற்று....
மாசியில் ஓர் இரவு சிவனுக்கு விழித்து....
பங்குனி உத்திரத்தில் கந்தனை வணங்கி....
சிறப்பாய் முடிகின்றது நம் தமிழ்
மாதங்கள்...............

**- கோகிலா மோகன்**

**மனைவி.**

ஏங்க ஏங்க
என்று
ஏங்க வைப்பவள்

மனைவி..!...

- **கோகிலா மோகன்**

தொப்புள்கொடி அறுபடும் முன்னரே
எழுதிவிட்ட பிறப்பை
முத்தமிட்டு ஈரப்படுத்திக்கொண்டே
இருக்கிறது வறண்ட மனம்..
கொத்தாக உதிரும் இலைகளுக்கு நடுவில்
நிற்கிறது குழப்பங்கள் கருக்கொண்ட
காலத்தின் சூன்யம்
நிசியிலுறங்கா ஓநாயின் ஓலத்தோடு
நகரும் காட்சிப்பிழைகள்
மீதமர்ந்த அரவத்தின் கிசுகிசுப்பில்
முடிவுகளை தீர்மானிக்க தவறுகிறது
அவரவர் சுயம்
கீழுதட்டை கடித்துக்கொண்டு எழுவதற்கு
எத்தனிக்கும் இயலாமையின் தோள்பட்டையில்
தட்டி கொடுக்கிறது அடுத்த விடியலுக்கு
காத்துக்கிடக்கும்
ஏதோ ஒரு நம்பிக்கை
எது எப்படியோ
எதிர்பார்ப்பின் தழும்புகள் பிரசவித்துச்
சென்ற கோடுகள் மட்டும்
வரி வரியாய்

- **கவிதா ரவீந்தரன்**

**சதுரங்கம்**

ராணிதான் ராஜாவை
எதிரிகளிடம் இருந்து
பல வழிகளில் சென்று
பல அரண் அமைத்து
காப்பது......
ஆளுமை ராணிக்கு தான்
இது ராஜாவுக்கும் தெரியும்....
ராஜாவால் ஒரு கட்டம் தான் நகர
முடியும்...இறுதி வெற்றி
என்னவோ ராஜாவுக்கு தான்
ஆனால் ராணி இல்லையேல் ராஜா இல்லை...
ராஜா கணவன் ராணி மனைவி என்பதை
சொல்லி
தெரிவதில்லை

- **கோகிலா மோகன்**

# தமிழர் நலவாழ்வு மன்றம் - இனிய துவக்கம்

வான் புகழ் வள்ளுவனை தந்த தமிழ் மண்ணில் நாங்களும் பிறந்திருக்கின்றோம் என்பது தமிழர்களுக்கான பெருமை மிகு அடையாளங்களுள் ஒன்று. தாய் மொழியினை பேணுவது மட்டுமே நம் கலாச்சாரத்தை உயிரோடு காத்து நிற்கும் என்பதை உணர்ந்தவர்களாக , தமிழ் மொழியையும் அதை சார்ந்த கலையினையும் அடுத்த தலைமுறைக்கு கடத்தி செல்ல முனைந்து , அதன் மூலம் முளைத்த விருட்சம் தான் "தமிழர்கள் நலவாழ்வு மன்றம்" என்ற அமைப்பு. இனிய நாளாம் , அக்டோபர் திங்கள் 15 ம் நாளன்று , Dalhousie University - Student Union Building ல் Halifax வாழ் தமிழர்கள் முன்னிலையில் சிறப்பாக துவக்கப்பட்டது. "வாலறிவன் நற்றாள் தொழார் எனின் " என வள்ளுவன் வாக்கிற்படி , தமிழ் சமூகத்தின் மூத்தவர்களையும், தன்னலமற்ற சேவை புரிந்த பெரியவர்களையும் கொண்டு , அவர்கள் திருக்கரத்தால் TNVM என்கிற "தமிழர்கள் நலவாழ்வு மன்றம்" இனிதே துவங்கப்பட்டது.





சிறப்பு அம்சமாக தமிழ் சமூகத்தை சார்ந்த பல்வேறு துறைகளில் சாதித்த இளைஞர்களை அடையாளம் கண்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள் . குறிப்பிடும் வகையில் சதுரங்கம் ( chess ), பூப்பந்து ( badminton ), நீச்சல் ( swimming ), பரதம் ( Classical Dance ), சைக்கிள் ( cycling ) மற்றும் Taekwondo ஆகிய துறைகளில் முதன்மை பெற்ற தமிழ் வீரர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.









கலை மற்றும் இலக்கிய பிரிவில் , பாட்டு , நடனம் , இசை , யோகாசனம் மற்றும் திரைப் பாடல்களுக்கான நடனம் நடை பெற்றது. அவற்றிலிருந்து சில துளிகள் இங்கே!













முத்தாய்ப்பாக , halifax வாழ் தமிழர்களுக்கு ( ஏன் தென்னிந்தியர்களுக்கு என்று கூட சொல்லலாம் ), Dr . Swaminathan அவர்கள் ஆற்றிய பணியை போற்றி அவர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.



**Hon. Deputy Speaker Lisa Lachance**, **Hon. MLA . John A. MacDonald**, **Hon . MLA . Ali Duale** மற்றும் **Hon. Deputy Mayor Sam Austin,** அவர்கள் முன்னிலையில் இந்த விருது **Dr . Swaminathan** அவர்களுக்கு வழங்க பட்டது

# BADMINTON TOURNAMENT

## பூப்பந்து போட்டி

Badminton, a racquet sport with roots in ancient civilizations, has gained immense popularity worldwide. Originating from a simple pastime to a highly competitive sport, badminton requires players to hit a shuttlecock over a net. In recent years, badminton has seen a surge in interest, with many enthusiasts participating in local and international tournaments. The game's fast-paced nature and strategic elements make it a thrilling experience for players and spectators alike. TNVM, recognizing the widespread appeal of badminton, organized a tournament on December 16th and 17th, 2023 among our Tamil community. The event featured various categories such as Men's Singles, Women's Singles, Men's Doubles, Women's Doubles, Kids/youth Singles, Kids/youth doubles and Mixed Doubles, attracting participants from diverse backgrounds and skill levels. This initiative not only promotes physical activity but also fosters a sense of community and healthy competition. By organizing tournaments like this, TNVM showcases its commitment to engaging the community in a sport that continues to captivate players of all skill levels.

## Badminton winners List

### Adult Men Singles (Beginner)

| Prize | Player |
|---|---|
| 1st | Anandabaskaran Venkatachalam |
| 2nd | Vasanth Palanivel |
| 3rd | Ashok Thanikachalam |

### Adult Men Singles (Intermediate)

| Prize | Player |
|---|---|
| 1st | Sasikumar Ganesan |
| 2nd | Rineesh Abraham |
| 3rd | Vishal Agarwal |

### Adult Women Singles (Beginner)

| Prize | Player |
|---|---|
| 1st | Aishwarya Mala GM |
| 2nd | Priyadharshini |
| 3rd | Yuganthi Krishnamoorthy |

### Adult Women Singles (Intermediate)

| Prize | Player |
|---|---|
| 1st | Haripriya |
| 2nd | Amritha Velayutham |
| 3rd | Manoranjitha Thyagarajan |

### Kids/Youth Singles (Beginner)

| Prize | Player |
|---|---|
| 1st | Jayden Aloysius |
| 2nd | Niha Senthil Kumar |
| 3rd | Naesaa Prathaban |

### Kids/Youth Singles (Intermediate)

| Prize | Player |
|---|---|
| 1st | Sameer Kumar Kanduri |
| 2nd | Sidhesh Ganesh |
| 3rd | Jashmitha Loganathan |

**Adult Men Doubles**

| Prize | Player |
|---|---|
| 1st | Sasikumar Ganesan/Sriram Veeraragavan |
| 2nd | Rineesh Abraham/Sidharth Sridhar |
| 3rd | Pratheep Kumar M/Aravind Balakumar |

**Adult Women Doubles**

| Prize | Player |
|---|---|
| 1st | Yuganthi Krishnamoorthy/Aishwarya Mala GM |
| 2nd | Gayathri Vasudevan/Priyadharshini |
| 3rd | Manoranjitha Thyagarajan/Haripriya |

**Adult Mixed Doubles**

| Prize | Player |
|---|---|
| 1st | Gayathri Vasudevan/Sasikumar Ganesan |
| 2nd | Vishal Agarwal/Priyadharshini |
| 3rd | Pratheep Kumar M/Aishwarya Mala GM |

**Kids/Youth Doubles**

| Prize | Player |
|---|---|
| 1st | Riyansh Balavikram/Siddesh Ganesh |
| 2nd | Mahathi boopalakrishnan/Nandhini Raja |
| 3rd | Naesaa Prathaban/Niha Senthil Kumar |



# சதுரங்க போட்டி

# CHESS COMPETITION

Chess is a timeless game that has captivated minds and challenged strategists for centuries. With origins dating back to the 6th century, this ancient game has evolved into a complex battle of wits played on a checkered board

The chess is also source of inspiration and intellectual stimulation. It teaches patience, discipline, and the importance of evaluating alternatives. It encourages critical thinking, problem-solving, and the ability to adapt to changing circumstances.

But chess is more than just a game. It transcends borders, cultures, and languages, connecting people around the world. It is a universal language that fosters camaraderie and respect among players. In the realm of chess, age, gender, and background become irrelevant, as the focus shifts solely to the battle of minds on the board. TNVM conducted chess competition on 17th December 2023 (Kids/Youth, & Adults)



| Winners List | |
|---|---|
| **Kids/Youth** | **Players** |
| 1st Place | Tanusri Sridhar |
| 1st Place | Athesh Pranav Thangaraj |
| 1st Place | Rithwik Loganathan |
| 2nd Place | Khushi Naik |
| 3rd Place | Ashwath Senthil Kumar |
| 3rd Place | Jaisekha Kumaresan |
| 3rd Place | Nish Mahathav Magesh |
| 3rd Place | Sandhana Karthikeyan Saranya |
| 3rd Place | Pavithran Arivazhagan |
| 3rd Place | Arnav Mahadev Vidyaprasad |
| **Adults** | |
| 1st Place | Arthi Balasubramanian |
| 2nd Place | Saradhi |
| 3rd Place | Navin Natarajan |

# CELEBRATING OUR TIMELESS HERITAGE

**IMMENSE PRIDE & PLEASURE INVITING**

## HONOURABLE FEDERAL MINISTER

# GARY ANANDASANGAREE

**FEDERAL MINISTER OF CROWN-INDIGENOUS RELATIONS CANADA**

- Instrumental in recognizing January as **Tamil Heritage Month** in Canada
- Renowned for advocacy in refugee rights and human rights
- Advocate for **Multiculturalism**, **Justice**, and **Indigenous Relations**.
- Recipient of the Queen Elizabeth II **Golden Jubilee Medal** & **Diamond Jubilee Medals**

*INSTRUMENTAL*

**IN RECOGNIZING JANUARY AS TAMIL HERITAGE MONTH**



**GARY ANANDASANGAREE**

**Minister of Crown–Indigenous Relations Canada**

# பயணச்சீட்டு - சிறுகதை

பரபரப்பான காலைப் பொழுது செங்கல்பட்டு ரயில் நிலையத்தில் சீனப் பெருஞ்சுவர் போல் பயணச்சீட்டு வாங்க வரிசையில் நின்று கொண்டிருந்தனர் மக்கள். நானும் அதில் போய் சேர்ந்து கொண்டேன், மறவட்டை ஊறுவது போல் மெதுவாக நகர்ந்தது வரிசை. முன்னாலிருந்து என்னையாரோ கூப்பிட்டார்கள் அது என் அத்தை மகளின் கணவர், சிங்கப்பூர் வாசி. விடுமுறையில் வந்திருப்பதால் முதல் வகுப்பு பயணச்சீட்டு வரிசையில் நின்றார். அவருடன் அவரின் அம்மாவும் வந்திருந்தார். எங்கே செல்ல வேண்டுமென்று கேட்டு… எனக்கும் அப்படியே ஒரு முதல் வகுப்பு சீட்டை வாங்கி கொடுத்தார். சீட்டைப் பார்த்ததும் தலையே சுற்றியது 250 ரூபாய் என் மாமூல் சீட்டின் விலை 30 ரூபாய் இது என் ஒரு மாத சீசன் டிக்கெட்டின் தொகை. அப்பொழுதே… முடிவு செய்துவிட்டேன் இதை பிரேம் செய்து மாட்ட வேண்டுமென்று, ஆகையால் சீட்டை மடிக்காமல் பத்திரமாக பையில் வைத்துக் கொண்டேன்.

கடந்த ஏழு வருடங்களாக பெண்கள் பெட்டியில் இருந்து வேடிக்கை மட்டுமே பார்த்த முதல் வகுப்பு பெட்டியில் முதல் முதலாக பயணிக்க போகிறேன். படபடப்புடன் புது பணக்காரியின் கர்வமும் தொத்திக்கொண்டது ரயில் வந்து நின்றதும் முந்தியடித்துக் கொண்டு இடம் பிடிக்க தேவையில்லை. ஆற அமர ஏறினோம். மூவரும் வசதியான இடம் பார்த்து உட்கார்ந்து கொண்டோம். அட… குஷன் சீட்டு, ஒருமுறை எவரும் அறியாமல் குதித்து உட்கார்ந்து பார்த்தேன் ரயில் நகரத் தொடங்கியதும் உறவினர் என் கல்லூரி படிப்பை பற்றி விசாரித்தார் பின் அப்படியே அவரது அனுபவங்களை பகிர்ந்து கொண்டே பயணம் நகர்ந்தது

அவரது இனிமையான பேச்சு ஒன்றரை மணி நேர பயணத்தை துரித பயணமாக மாற்றியது. இது மட்டும் காரணம் என்று சொல்லி விட முடியாது காற்று புக முடியாத கூட்ட நெரிசலில் பயணித்து பழகிய எனக்கு தங்கு தடையின்றி வீசிய ஜன்னல் காற்றும் ஒரு முக்கிய காரணம். உறவினர்கள் இருவரும் கிண்டி ரயில் நிலையத்தில் விடை பெற்றுக் கொண்டார்கள் அதிலிருந்து இரண்டாவது நிலையத்தில் நான் இறங்க வேண்டும். ஒரு முறை பையைத் திறந்து பயணச்சீட்டு உள்ளதா என்று சரி பார்த்துக் கொண்டேன் ஜன்னல் காற்றில் பறந்துவிடப் போகிறது என்று பையுடன் சேர்த்து சீட்டை அழுத்திப் பிடித்துக் கொண்டேன்.

ரயில் வேகம் எடுக்க தொடங்கியது. ஓர் கல்லூரி மாணவன் வேகம் எடுத்த ரயிலில் ஓடி வந்து ஏறினான். ஏறியவுடன் அது முதல் வகுப்பு என உணர்ந்ததும் இறங்க முயன்ற அவனை அடுத்த நிலையத்தில் இறங்கவும் என்று தடுத்தேன். அவன் உயிரை காப்பாற்றிய பெருமிதம்! ஆனால் அப்பெருமிதம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை.

அடுத்த நிலையம் வரும் வரை அவன் அவ்விடத்திலேயே நின்றான். அடுத்த நிலையத்தில் ரயில் நிற்கும் முன்னே வெள்ளை உடையில் சோதனையாளர் ஏறினார். முன்பே நின்றிருந்த அவனிடம் தான் முதல் பரிசோதனை. அவன் அவரிடம் எவ்வளவு விவரிக்க முயன்றான் இருப்பினும் வண்டி நின்றதும் சோதனையாளர் அவரை அழைத்துச் சென்றார். இவை அனைத்தும் கணப்பொழுதில் நடந்தேறியது இவ்வதிர்ச்சியில் இருந்து மீள்வதற்குள் நான் இறங்கும் இடமும் வந்தது .
ரயில் தன் பாரத்தை இறக்கியது ஆனால் என் மனம் கனத்தது.
நான் பேசி அவன் உயிரை காப்பாற்றினேனா?
இல்லை …! நான் பேசாமல் அவனை சோதனையாளரிடம் மாட்டி விட்டேனா?

**-மோனிஷா அதியனூர் ராமதாஸ்**

# கேரம் ( சுண்டாட்டம் ) போட்டி

Carrom is a tabletop game of Indian origin in which players flick discs, attempting to knock them to the corners of the board. The game is very popular in the Indian subcontinent and is known by various names in different languages. In South Asia, many clubs and cafés hold regular tournaments. Carrom is very commonly played by families, including children, and at social functions. Different standards and rules exist in different areas. TNVM conducted carrom competition on 17th December 2023 in different formats (Kids, Men's Singles, Men's Doubles, Women's Singles, Women's Doubles and Mixed Doubles)




| Carrom Winners List | | |
|---|---|---|
| Kids | | Players |
| | Winner | Guhaprajith Ilangovan |
| | Runner | Nethravathi Ilangovan |
| Womens Singles | | |
| | Winner | Gayathri Vasudevan |
| | Runner | Divya T |
| Womens Doubles | | |
| | Winner | Gayathri Vasudevan<br>Surya Jenifer Jayapal |
| | Runner | Yuganthi Krishnamoorthy<br>Dharmambal Sureshkumar |

| Carrom Winners List | | |
|---|---|---|
| **Mixed Doubles** | | |
| | Winner | Sabari Nathan Durai Kannu<br>Priya Dharshini |
| | Runner | Ashok Thanikachalam<br>Ragini Mohan |
| **Mens Singles** | | |
| | Winner | Ashok Thanikachalam |
| | Runner | Abhishek Karthik |
| **Mens Doubles** | | |
| | Winner | Ashok Thanikachalam<br>SabariNathan DuraiKannu |
| | Runner | Magesh Shanmugam<br>Maria Aloysius |

# மருதாணி போட்டி



| மருதாணி போட்டி முடிவுகள் | | |
|---|---|---|
| **Prize** | **Primary Participant** | **Secondary Participant** |
| First | Santhiya Ravi | Aadithya Manickam |
| Second | Ramya Rajagopal | Jubi Jamaludeen Harisa |
| Third | Kavitha Alagarsamy | Divya Ananth |
| Third | Sreesha Parthasarathy | Yugantha Krishnamurthy |

# அந்நியன் (ALIEN) - DISCOVERING HUMANS

"Aahh", I screamed!!!!

My Space ship zoomed into a planet, "Drrrrrrrrrr". It was blue and green and had lots of light which I have never seen. I tried to steer away but nothing worked. "What if there's humans there", I thought and got terrified. I was an Allien to them and I have never seen a human before.

Everybody thinks human are a myth in our planet (even me). But at this point anything can happen. I squeezed my eyes…. shut…. hoping, I would make it through the atmosphere. I wished I wasn't alone…. "BAM"!!!



Everything went silent. "HUH", I gasped sitting up. I examined myself….I had burn marks everywhere. A nurse walked by. Her eyes grew wide as she seen me, "A green skinned creature"?

Me on the other hand was really happy to see a HUMAN. I have imagined one my entire life how a human will look like. The nurse didn't look like what I imagined, at all. I smiled at her. First, she just stared but then ended up smiling 😊

The Nurse signaled a doctor over to examine me. He took my DNA to test, knowing I was not a human. He checked my heartbeat and he raised his eyebrows on how fast it was (double the human heartbeat for a minute).

A few days later, I was let out from the hospital and the nurse took me home with her. Lots of people stared and I did feel uncomfortable at first. But in a few days, people and I got used, "The Alien in NOVA SCOTIA". I started a job and found my soulmate. I did miss my "REAL" home but I knew it was fate to stay on earth for the rest of my life.

Humans are not that bad after all; I thought to myself. They were kind and cared for me, even if I wasn't one among them. I did think about my family back at home, especially my sister, my brother and my loving pet Dusty.

When humans are nice to me (ALIEN)…. They are surely nicer to other fellow HUMANS.

**"LOVE ALL AND BE KIND"**


– **Adhya Satheesh Kumar**

***Grade 6, Sackville Heights Junior High, Middle Sackville.***

# வழிபாட்டு தலங்கள்

### அமெரிக்காவின் ஐயப்பன் கோவில்


அமெரிக்காவில் உள்ள மேரிலாண்ட் என்ற மாநிலத்தில் கேரளாவில் உள்ளது போன்ற வடிவமைப்பில் 18 படிகள் உடன் அய்யப்பன் கோவில் உள்ளது. அதில் அனைவரும் விரதம் இருந்து இருமுடி கட்டி பிறகு கோவில் இருக்கும் ஒரு சிறிய மலையை சுற்றி வந்தவுடன் 18 படிகள் ஏறி அய்யப்ப கடவுளை தரிசிப்பார்கள் . இந்தியா செல்ல முடியாமல் அனால் கேரளா அய்யப்பனை தரிசிக்க விரும்பும் பக்தர்கள் இந்த கோவிலுக்கு சென்று வரலாம்.





### மஞ்ச் முருகன் கோவில்

எட்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறுவன் கடும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு தூங்கிக் கொண்டிருக்கும் போது முருகன் நாமத்தை முனகிக் கொண்டிருந்தான். மறுநாள் அவனது குடும்பத்தினர் அவரை அருகில் உள்ள முருகன் கோவிலுக்கு அழைத்துச் சென்று நிலைமையை விளக்கினர். அப்போது அர்ச்சகர் அவர்களிடம் பூஜை செய்து முருகனுக்கு ஏதாவது வழங்குமாறு கேட்டுக் கொண்டிருந்தார். அந்த நேரத்தில் அந்த சிறுவன் கருவறைக்குள் ஓடி முருகனின் காலுக்கு அடியில் மஞ்ச் சாக்லேட்டை வைத்திருந்தான். திடீரென்று அவருக்கு காய்ச்சல் குணமாகிவிட்டதாக செய்திகள் எங்கும் பரவின. அன்று முதல் மக்கள் கோவிலுக்கு மஞ்ச் சாக்லேட்டை வழங்கத் தொடங்கினர். கேரள ஆலப்புழாவில் இருக்கும் இக்கோயில் தென்பழனி என்றும் அழைக்கப்படுகிறது.





- சிந்து செல்வராஜன்

# சதுரங்கம் - A THERAPY

## Chess is more than a game - it's therapy!

I started playing chess at the age of 6. The beginning was quite funny how I got interested in chess. On a fine day I pointed at our cupboard in the living room and asked my dad “What are all the trophies for?”. He replied “I got them from playing chess”, so immediately I had to get more trophies than my dad. And guess what I did in the end ! I got more trophies and also fame.

My first chess coach was my favorite one. He was very patient and didn’t grumble about me. There were also many other kids who wanted to learn to play chess but they were in the academy for more than 1 or 2 years while I was there for only one month. However I managed to get more trophies in a shorter period.

Thus I realized the quote 'Practice makes perfect’ is correct. The key to my success is I work on at least 10 chess puzzles and practice online chess for at least 2 hours per day. Chess was my freedom, whenever I played chess I forgot the other thoughts in my mind, But sometimes I felt so pressurized so I felt the urge to quit but I never did.



I kept going on and now I am teaching other kids to play chess. I hope this will persuade other young, talented kids to follow their passion. My friendly suggestion to my fellow friends, please pursue your passion on your will and not on others compulsion.

- ஸ்ரீதேவி மோகன்

# இயல் (ற்)(ற) தமிழ் போட்டிகள்

மழலையே கவிதை என்பது போல் இருக்கும். வள்ளுவன் கூட "குழலினிது யாழினிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்" என்பார் . அந்த மழலையே கவிதை ஒன்று சொன்னால் எப்படி இருக்கும் ! TNVM சார்பினில் கவிதை , கதை , திருக்குறள் , ஓவியம் ஆகிய பிரிவில் போட்டிகள் நடத்த பட்டது. போட்டியாளர்களில் வெற்றிபெற்றவர்களுக்கு Tamil Heritage Month விழாவில் பரிசுகள் வழங்கப்பட உள்ளன

| திருக்குறள் போட்டி முடிவுகள் | | |
|---|---|---|
| **Kids Age 4 - 7** | **Prize** | **Winners** |
| | First | Bhargavi Chenduri |
| | Second | Sabarish Balaji Sudha |
| | Third | Rithiksha Yokaprakash |
| | Third | Abhinav Raghuraman |
| **Kids Age 8 - 12** | PRize | **Winners** |
| | First | Lathika Sree Balaji Sudha |
| | Second | Madhushree Chenduri |
| | Third | Nithinadhith Sethupathi Revathi |
| | *Special Mention* | Naesaa Srinivasan |

| பேச்சு போட்டி முடிவுகள் | | |
|---|---|---|
| **Kids Age 4 - 7** | **Prize** | **Participants** |
| | First | Balaji Arun |
| | Second | Saanvi Harinath |
| | Third | Thiyashree Elancheziyan |
| **Kids Age 8 - 12** | | |
| | First | Naesaa Srinivasan |
| | Second | Lathika Sree Balaji Sudha |
| | Third | Nethra Anandabaskaran |
| **Kids Age 13 - 16** | | |
| | First | Ishaan Anandabaskaran |

| கவிதை போட்டி முடிவுகள் | | |
|---|---|---|
| **Kids Age 4-7** | **Prize** | **Winners** |
| | First | Magizhitha Purushothaman |
| | Second | Thiyashree Elancheziyan |
| | Third | Venba Bharath |
| **Kids Age 8-12** | **Prize** | **Winners** |
| | First | Naesaa Srinivasan |
| | Second | Niha Senthil Kumar |
| | Third | Madhushree Chenduri |

| கதை சொல்லுதல் போட்டி முடிவுகள் | | |
|---|---|---|
| **Kids Age 4 - 7** | **Prize** | **Participants** |
| | First | Sai Vishak Ramachandran |
| | First | Arshiv veer Srinivasan |
| | Second | Thiyashree Elancheziyan |
| | Third | Sivanya Saravanan |
| **Kids Age 8 - 12** | | |
| | First | Adhya Praveenkumar |
| | Second | Naesaa Srinivasan |
| | Third | Haashicka Nagaraj |
| | Third | Sandhana Karthikeyan Sara |
| **Kids Age 13 - 16** | | |
| | First | Ishaan Anandabaskaran |



| ஓவியப் போட்டி முடிவுகள் | | |
|---|---|---|
| **Kids Age 4 - 7** | **Prize** | **Participants** |
| | 1st | Bhargavi Chenduri |
| | 2nd | Mithran Kishore |
| | 3rd | Arshiv Veer Srinivasan |
| **Kids Age 8 - 11** | | |
| | 1st | Theja Yazhini Vijaykumar |
| | 2nd | Niha Senthil Kumar |
| | 3rd | Nethra Anandabaskaran |
| | 3rd | Madhushree Chenduri |
| **Kids Age 12 - 16** | | |
| | 1st | Lathika Sree Balaji Sudha |
| | 2nd | Ishaan Anandabaskaran |

# து ணு க்கு க ள்

## படித்ததில் பிடித்தது

ஒரு தாயிடம் தன் எட்டு வயது மகன் வந்து சொன்னான், அம்மா ஐ லவ் யு என்று, உடனே அவன் அன்னை ஐ லவ் யு டூ என்றாள். இப்போது மகனுக்கு பதினைந்து வயது! அவன் தாயிடம் ஐ லவ் யு என்றான்.
அவன் அன்னை சொன்னாள், என்னிடம் பணம் எதுவும் இல்லை, அதை என்னிடம் எதிர்பார்க்காதே என்று!

மகனுக்கு இப்போது இருபத்தியெட்டு வயது! அவன் தன் தாயிடம் ஐ லவ் யு என்றான். அவன் அன்னை கேட்டாள், யார் அந்த பெண்? வீட்டிற்கு அன்று கூட்டி வந்தாயே அவளா? அவள் வேண்டாம். நம் வீட்டிற்கு அவள் சரி வர மாட்டாள் என்று!
மகனுக்கு இப்போது முப்பத்தியெட்டு வயது ஆனது! அவன் தாயை பார்க்க வந்தான். அவளிடம் ஐ லவ் யு அம்மா என்றான் சிறிது சோகமாக. உடனே அவன் அன்னை, அன்றே சொன்னேன் அவள் நம் வீட்டிற்கு சரி வர மாட்டாள் என்று. நீ கேட்கவில்லை. இப்போது அவஸ்தை படு என்றாள்!

இப்போது மகனுக்கே அறுவது வயது ஆனது. அவன் தாய்க்கு எண்பத்திரெண்டு. இப்போதும் மகன் ஐ லவ் யு அம்மா என்றான். அந்த அன்னை உடனே, போகும்போது உன் தந்தை எதிலும் கையெழுத்து போடாதே என்று கூறி சென்றுவிட்டார். அதனால் நான் எதிலும் கையெழுத்து போட மாட்டேன் என்று கூறினாள்!
இந்த உரையாடலை கவனித்தால் ஒன்று நன்றாக விளங்கும். மகன் ஒவ்வொருமுறையும் ஐ லவ் யு என்று தான் கூறினான். ஆனால் அன்னைக்கு தெரியும் ஒவ்வொருமுறையும் என்ன பதில் கூற வேண்டும் என்று.

**- ஜெயா ரவி**

## நற நற (கடி) சிரிப்பு

ஒருத்தர் அவரோட Driving License குழி தூண்டி புதைச்சிட்டாராம். அது ஏன்?
**விடை:** ஏன்னா அது Expiry ஆகிடுச்சாம்

Costly ஆன கிழமை அது?
**விடை:** வெள்ளிக்கிழமை

மிக நீளமான இசைக்கருவி எது?
**விடை:** புல்லாங்குழல் (புல்'long'குழல்)

The Hindu paper ஏன் எடை அதிகமாயிருக்கு?
**விடை:** ஏன்னா அது மேல் யானை இருக்குல்ல

எலிய என்ன பண்ணா யானை ஆகலாம்?
**விடை:** எலிக்கு ஒரு pant'ஐ போட்டால் அது எலி'phant (Elephant) ஆகிடும்

உட்கார முடியாத தரை எது?
**விடை:** புளியோதரை

சோகமா இருக்கும் மரம் எது?
**விடை:** அசோக மரம்

Postman கீழ விழுந்தா எப்படி விழுவாறு?
**விடை:** தபால்ன்னு

பூனைக்கு பிடிச்ச school எது?
**விடை:** எலிmentary School

வெற்றிலையுடன் சேராத பாக்கு எது?
**விடை:** மைசூர் பாக்கு

**- வாணி பிரதாபன்**

# OUR SPONSORS

## PLATINUM SPONSOR




## GOLD SPONSOR

ICICI Bank Canada

MOHIT BHATIA

B2 BIRYANI & KEBAB FOODS LIMITED

B2 AUTHENTIC

CATERING SERVICES | PARTY ORDERS | RETAIL FOOD DISTRIBUTION

## SILVER SPONSOR




## BRONZE SPONSOR




COSTCO WHOLESALE

Red chillies
Indian Restaurant & Groceries
936 Bedford Highway, Halifax, Nova Scotia
www.redchilliesns.ca
www.redchilliesbazaar.ca

## PARTNERS




தமிழர்கள் நலவாழ்வு மன்றம்
MARITIME TAMIழ் WELFARE ASSOCIATION
CELEBRATING CULTURE
EMPOWERING TAMILS FOR A BRIGHTER TOMORROW